உ

சிவமயம்

# ஆனைவிழுந்தான் விநாயகர் ஆலய வரலாறு



மட்டுவில் ஆ. நடராசா

உ

சிவமயம்

# ஆனைவிழுந்தான் விநாயகர்
# ஆலய வரலாறு

மட்டுவில். ஆ. நடராசா

பதிப்பாளர் : திரு. சி. சிவமகாராசா M. P.

முதற் பதிப்பு : 1990
சுக்கில ஆண்டு

விலை ரூபா 12-50

பதிப்பகம் : குகன் அச்சகம்
தெல்லிப்பழை

உ

சிவமயம்



# ஆனைவிழுந்தான் விநாயகர் துதி

ஆனை விழுந்தான் விநாயகனை யன்போடு
ஏனை நினைவற்று ஏத்திஞல் — ஏத்துவார்
வெவ்வினைகள் தீர்த்து விரும்பும் வரமளித்து
திவ்வியமாம் முத்திதருந் தான்.

உ

சிவமயம்

# முகவுரை

'கோயில் இல்லா ஊரிற் குடியிருத்தல் ஆகாது.' என்னும் முதுமொழி, ஒவ்வொரு ஊரிலும் ஆலயம் அமைந்திருக்கவேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது.

''தரிசனத்தின் பொருட்டுச் சமீபத்திலே தேவாலயம் இல்லாத இடங்களின் மாத்திரம் நூதனமாகத் தேவாலயம் கட்டுவித்து இயன்றமட்டும் பூசை முதலியவைகளை விதிப்படி நடத்துவித்தல் வேண்டும்'' என்பது 'தருமம்' என்னுந் தலைப்பில் நாவலர் அவர்கள் எழுதிய கட்டுரையில் இடம்பெறும் ஒரு வசனம்.

ஆலய பூசைகள் விதிப்படி செய்யப்படவேண்டும்; விதிப்படி செய்யப்படாதொழியின் பல தீங்குகள் விளையும்.

''முன்னவ னார்கோயிற் பூசைகள் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள வாரிவளங் குன்றுங்
கன்னங் களவு மிகுத்திடுங் காசினிக்
கென்னரு ணந்தி யெடுத்துரைத் தானே''

என்கின்றது திருமந்திரம்.

''தேவாலயங்களுள்ளும் புண்ணிய தீர்த்தங்களுள்ளும் சிலமாயுள்ளவைகளை முன்போலச் செய்வித்தல் வேண்டும். அப்படிச் செய்தவர் பெறும் பயன், முன் அவைகளைச் செய்தவர் பெற்ற பயனிலும் ஆயிரமடங்கதிகமாம்.'' என்பதும் நாவலர் கூற்று.

ஆனைவிழுந்தான் விநாயகர் ஆலயத்தை மீளமைப் போர் பெறும் பயன், புதிய ஆலயம் ஒன்றை அமைப் போர் பெறும் பயனிலும் ஆயிரம் மடங்கு அதிகமாக லாம்.

பழமை வாய்ந்ததெனக் கருதப்படும் இவ்வாலய வர லாறு இதுவரை விரிவாக ஆய்வு செய்யப்படவில்லை.

அதனால், இவ்வாலய வரலாற்றை ஆய்வுசெய்வோ ருக்கு வேண்டிய சில செய்திகளைத் தொகுத்தளிக்கும் நோக்குடன் இச்சிறு நூலை எழுத ஆரம்பித்தேன். ஆலய வரலாறு பற்றிய செய்திகளைச் சேகரிப்பதற்காகப் பலரை அணுகினேன். நான் எவர்களை அணுகினேனோ அவர்கள் அனைவரும் தம்மால் ஆனவரை எனக்கு உதவினார்கள். எனக்கு உதவியவர்களின் பெயர்கள் அனைத்தையும் இங்கு குறிப்பிடுவதாயின் இம்முகவுரை நீளும். அதனால் எவரது பெயரையும் நான் இங்கு குறிப்பிட வில்லை.

இந்நூலில் ஆலயவரலாற்றுக்கு மேலதிகமாக விநாயகர் திருப்பதிகமும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

நூல் ஒன்றை எழுதுவது செயற்கருஞ் செயலல்ல. இன்றைய சூழ்நிலையில் அதை அச்சிட்டு வெளியிடுவது தான் என் போன்றோருக்குச் செயற்கருஞ் செயல். அச் செயலைச் செய்துதவியவர் திரு. சி. சிவமகாராசா. (பாராளுமன்ற உறுப்பினர்) அவர்கள். நூலை அச்சிட்ட வர்கள் குகன் அச்சகத்தார்.

தமது பல்வேறு பணிகளுக்கிடையே, கையெழுத்துப் பிரதி முழுவதையும் பொறுமையுடன் படித்து, இந் நூலுக்கு அணிந்துரை எழுதி உதவியவர் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக இந்துநாகரிகத் துறைத் தலைவர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன் அவர்கள்.

இந்நூல் வெளிவர உதவிய பெருமக்கள் அனைவருக்கும் எனது நன்றி உரித்தாகுக.

உதவி செய்தவர்களுக்குச் சொற்களால் நன்றி கூறுவது இலகுவானது.

''உதவி வரைத்தன்று உதவி உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து''

என்கின்றது குறள்.

அவனின்றி அணுவும் அசையாது. ஆலய வரலாற்று நூலை எழுதுவதற்கும் அவனருள் வேண்டும். இந்நூலை எழுதுவதற்கும், அச்சிடுவதற்கும் தோன்றாத் துணையாய் நின்றவன் அவனே. அதனால், அவனே தானாகிய ஆனை விழுந்தான் விநாயகப் பெருமானைப் போற்றுவோம். அவனருள் அனைவருக்குங் கிடைக்கவேண்டுமெனப் பிரார்த்திப்போம்.

ஆ. நடராசா.

'வஞ்சி'
பத்தாவத்தை
இளவாலை
1990-01-02

உ

சிவமயம்

# பதிப்புரை

தமிழ் மக்களுக்குச் — சிறப்பாகச் சைவமக்களுக்குள்ள பெருங்குறை சரியான வரலாறு இல்லாமையாகும். உள்ள வரலாறுகளும் எழுதியவரின் மனச் சார்புக்கும், விருப்பு வெறுப்புகளுக்கும் இடந்தந்து தூய்மையற்றனவாய் மக்களின் நம்பிக்கையைப் பெறத்தவறி விடுகின்றன. இதனுல் வரலாறுகளைப் போற்றுபவர்களும் துணிந்து எழுதுவோர்களும் மிகக் குறைவு.

எனினும் வரலாறு எமக்கு மிக இன்றியமையாதது. அதிலும் இன்றைய காலகட்டத்தில் எமது பண்பாட்டு மையங்களாகத் திகழும் சைவாலயங்களின் வரலாறுகள் பரந்த, ஆழமான, தூய்மையான நோக்குடன் எழுதப் படுதல் அவசியமாகும். மக்கள் தமது ஆலயத்தின் வரலாற்றைச் சரியாகத் தெரிந்து கொண்டால்தான் தன்னம்பிக்கையுடனும் - பற்றுடனும் - குழப்பமின்றியும் ஆலயத்தைப் போற்றி வாழ்வின் பயனைப்பெற முனைவர். முன்னைய வரலாறுகள் சரியாகக் கிடைக்காவிடினும் இன்றைய நிலை எதிர்காலத்துக்கு வரலாருகப் பயன் படும் என்பதை மனங்கொள்ள வேண்டும்.

இச்சீரிய நோக்குடன் இளவாலை ஆனைவிழுந்தான் விநாயகர் ஆலய வரலாறு மட்டுவில் ஆ. நடராசா அவர்களால் எழுதப்பட்டுள்ளது. இந்நூல் ஒரு நீண்ட காலத் தேவையை நிறைவு செய்கின்றது. வரலாற்ரு சிரியர்களோ - கர்ணபரம்பரைக் கதைகளில் நம்பிக்கை யுள்ளவர்களோ - திருப்பணி செய்து வழிபடும் அடியார் களோ எவருமே குறைகாண முடியாவகையில் - யாவ

ரும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இந்நூல் எழுதப்ப
ட்டிருப்பது ஒரு தனிச்சிறப்பு. எதிர்காலத்தில் ஆய்வு
செய்யவல்ல வரலாற்றாசிரியர்களுக்கும் இந்நூல் நல்ல
களம் அமைத்துக் கொடுத்துள்ளது.

சைவ சித்தாந்தக் கோட்பாட்டை அடிப்படையாகத்
கொண்டு ஆங்காங்கு அறக்கருத்துக்கள் அழுத்தமாகக்
தரப்பட்டிருப்பதும் பெரும் பயன் தருவதாகும். இறு
தியில் இந்நூலாசிரியரால் பாடப்பட்ட விநாயகர் பதி
கம் இடம் பெற்றுள்ளது. விநாயகர் வழிபாட்டை அறிந்து
ஓதியுணர்ந்து உய்திபெற இப்பதிகம் மிகப்பொருத்தமா
யமைந்துளது.

எனது பிறந்த ஊரின் குலதெய்வமாகிய ஆனைவிழு
ந்தான் விநாயகரின் வரலாற்று நூலைப் பதிப்பிக்க வா
ய்ப்புக் கிடைத்தமையை வியந்து விநாயகப் பெருமான்
அருள் யாவர்க்கும் கிடைக்கவேண்டித் துதிக்கின்றேன்.

இதனை முன்னோடியாகக் கொண்டு ஏனைய ஆலய
ங்களின் வரலாறுகளையும் வெளிவரச் செய்ய, வல்லவர்
கள் முயற்சிப்பார்களாக.

சி. சிவமகாராசா.

கொல்லங்கலட்டி,
தெல்லிப்பளை.
*1989-12-06*

உ

சிவமயம்

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி. ப. கோபாலகிருஷ்ணன் அவர்கள்

அளித்த

# அணிந்துரை

ஆலயமே எமது பண்பாட்டின் உறைவிடம் என உணரப்பட்டதன் பயனாக, ஊர்தோறும் காலங்காலமாகப் பல ஆலயங்கள் எழுந்தன: தென்னாட்டிலும் இலங்கையிலும் எழுச்சி பெற்ற தலங்களின் வரலாற்றை ஆய்வுசெய்யுமிடத்து அவை எந்த அளவுக்கு எமது பண்பாட்டை உருவாக்கியுள்ளன என்பது தெளிவாகும். அப்பர் சுவாமிகள் இத்தகைய ஆலயங்கள் நாம் வாழும் ஊருக்குப் புனிதத்துவத்தையும் லக்ஷ்மீகரத்தையும் ஏற்படுத்துவன என்பதை,

> "திருக்கோவில் இல்லாத திருவிலூரும்
> திருவெண்ணீ றணியாத திருவிலூரும்
> ..................................................
> அவையெல்லாம் ஊரல்ல அடவிகாடே"

என்ற குறிப்பின்மூலம் மறைமுகமாகச் சுட்டுகின்றூர். எனவே திருக்கோயில்கள் எமது பண்பாட்டின் வளர்ச்சியோடு ஒன்றிணைந்து இருப்பதால் அவை பற்றிய வரலாற்றை நாம் அறிவது அவசியமாகின்றது.

சைவாலயங்களின் வரலாறு எமது பண்பாட்டின் வரலாருகவே அமைந்துவிடுகின்றது. இலங்கையில் உள்ள ஆலயங்களின் வரலாற்றை உருவாக்குவதற்கான பல முயற்சிகள் அன்பர்கள் பலரால் அவ்வப்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பிரதேச ரீதியில், கிராம ரீதியில், தனி ஆலயங்கள் என்ற ரீதியில் வரலாறு சுருக்கமாகவும் விரிவாகவும் நூல்வடிவில் வெளிவந்துள்ளன.

எமது பிரதேசத்தில் உள்ள பல ஆலயங்களின் வரலாறு இன்னும் உரியவாறு வெளிக்கொணரப்பட வேண்டியுள்ளது. பல ஆலயங்களின் வரலாறுகளைப் பற்றி எமது முன்னேர்கள் சற்றேனும் சிந்திக்காத காரணத்தால், இற்றைக் காலத்தில் அத்தகைய ஆலய வரலாற்றை முறையாக அமைத்துக்கொள்வதில் எதிர் நோக்கப்படும் பிரச்சினைகளுக்கு ஆனைவிழுந்தான் விநாயகர் ஆலய வரலாறு ஒரு சான்ருகும். எனினும் கிடைக்கக்கூடிய தகவல்களையும், கர்ணபரம்பரைக் கதைகளையும், இலக்கிய மூலங்களையும் ஒப்பீடு செய்து ஆய்வுக் கண்ணேட்டத்தில் இந்நூலாசிரியரான மட்டுவில் ஆ. நடராசா அவர்கள் இவ்வாலய வரலாற்றைத் தொகுத்தளிக்க முற்பட்டுள்ளமை பாராட்டிற்குரியதாகும்.

கீரிமலை, மாவிட்டபுரம் போன்ற இடங்கள் எமது சமய வரலாற்றில் முக்கியத்துவம் பெறுபவை. இவ்விடங்களில் உள்ள திருத்தலங்கள் வரலாற்றுப்புகழ் மிக்கவை. இவற்ருேடு தொடர்புடைய ஆனைவிழுந்தான் விநாயகர் ஆலய கர்ணபரம்பரைக் கதைகளை ஆசிரியர் தொகுத்து, அவற்றின் நம்பகத்தன்மையைச் சீர்தூக்கி ஆராய்கின்றமை குறிப்பிடத்தக்கது.

'ஆனைவிழுந்தான்' என்ற சிறப்புப் பெயர் வந்தமைக்குரிய காரணம் பல கோணங்களிலிருந்து ஆராயப்படுகிறது. ஐதிகங்களாக வரும் செய்திகளை இறைப்பற்றுடையோர் பெரிதும் நம்புவர். பக்தியுணர்வை வருவிப்பதில் இத்தகைய ஐதிகங்களே பெரிதும் துணைபுரிகின்றன. பலகால இடைவெளியும் ஒழுங்காகப் பேணப்பட்ட வரலாற்று ஆதாரங்கள் இல்லாமையும் இவ்வாலய வரலாற்றினை அமைக்கும் முயற்சியைச் சற்றுக் கடினமாக்கியவிடத்தும் ஆசிரியர் பெரிதும் முயன்று பல கருத்துக்களை முன்வைக்கின்றார்.

இவ்வாலயச் சூழலிலிருந்து தொல்லியல் ஆய்வாளர்களின் முயற்சியால் பெறப்பட்ட சான்றுப் பொருட்களையும், ஆலய தல விருட்சமாகிய அரச மரத்தடியில் உள்ள மண்மேட்டின் பழைமையையும் சான்றுகளாகக் கொண்டு இவ்வாலயத்தின் வரலாறு பழமை வாய்ந்ததென ஓரளவு உறுதிப்படுத்தப்படுகின்றது.

இவ்வாலயம் ஏறக்குறைய கி. பி. 6—10 நூற்றாண்டுக்குரியது என்ற செய்தியும், கி. பி. 8ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டதெனக் கருதப்படும் காங்கேசன்துறை கயாத்துறைப் பிள்ளையார் கோவிலில் உள்ள மூலமூர்த்தியோடு இவ்வாலய மூலமூர்த்தி கொண்டு விளங்கும் ஒத்த தன்மையைக் கொண்டு இவ்வாலயம் கி. பி. 6—10ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக இருக்கலாம் என்ற செய்தியும் நூலாசிரியனால் முன்வைக்கப்படுகின்றன. இக்கருத்துக்கள் இவ்வாலய வரலாற்றில் முக்கியத்துவமுடையன. தொன்மை வாய்ந்த ஒரு ஆலயமெனக் கருதப்படத்தக்க வகையில் ஆசிரியர் இவ்வாலய வரலாற்றுச் செய்திகளைத் தொகுத்தளித்து நிறுவ முயன்றுள்ளமை பாராட்டிற்குரியது. இவரது கருத்துக்கள் இவ்வாலயம் பற்றி எதிர்காலத்தில் ஆய்வு செய்பவர்களுக்குரிய அடிப்படைத் தரவுகளாகவும், மேலும்

சிந்தித்து ஆய்வு செய்ய வழி வகுப்பனவாகவும் உள்ளன. இவ்வாலய வரலாறு மேலும் விரிவான ஆய்வுக்குரிய தொன்று.

'ஆனைவிழுந்தான்' என்ற பெயருக்கு ஆசிரியர் சைவசித்தாந்த விளக்கமும் அளிக்க முற்பட்டுள்ளார். இவ்வாலயத்தின் வளர்ச்சியில் பங்குகொண்ட அடியார்கள் பற்றியும் விபரங்கள் தரப்படுகின்றன. ஆலய வளர்ச்சியில் மக்களை ஈடுபட ஊக்குவிக்கும் வகையில் இவை ஒழுங்காகத் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. எமது மூதாதையரின் திருப்பணிக் கைங்கரியங்களை அறிய இத்தகவல்கள் உதவுகின்றன. தமிழ்நாட்டிற்கும் இத்தலத்திற்குமுரிய தொடர்பும் எடுத்துக் கூறப்படுகின்றது.

ஆலயத்தின் பூசகர் பரம்பரை, கும்பாபிஷேகங்கள் நிறைவேறிய காலங்கள், ஆலயக் கட்டிட வளர்ச்சி, பரிவாரமூர்த்திகள் பற்றிய விபரம், ஆலயத்தில் நடைபெறும் நைமித்திகக் கிரியைகள் போன்ற இன்னோரன்ன விபரங்கள் இந்நூலில் எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

மூர்த்தி, தலம் ஆகிய சிறப்புப் பெற்ற இவ்வாலயம் தீர்த்தம் இன்றி இருக்கும் குறையும் இந்நூலில் ஆசிரியரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. சிவகைங்கரியமென இதனை நிறைவேற்றி வைப்பதற்கு அடியார்கள் முன்வருவார்கள் என்பது எமது நம்பிக்கை.

இவ்வாலயம் பற்றிய மிகச் சுருக்கமான ஒரு நூலாக இது அமையினும், நூலாசிரியர் திரு. நடராசா அவர்களின் இம்முயற்சி அனைவரது பாராட்டிற்குரியதொன்றாகும். முன்னரும் மட்டுவில் ''சந்திரமௌலீசர் ஆலய வரலாறும் திருப்பதிகமும்'' என்ற நூலை வெளியிட்ட அனுபவமிக்க ஆசிரியர் இவ்வாலயத்தின் வர-

லாற்றுக் கருத்துக்களைத் தொகுத்துத் தெளிவான நடையில் எழுதி வெளியிடுவது குறிப்பிடத்தக்கதாகும். இவரது இம்முயற்சி ஈழத்து சைவாலய வரலாற்றை அறிய முயல்பவர்களுக்கு துணைபுரிவதாகும். ஆசிரியர் ஆத்மார்த்தமாக விநாயகப் பெருமான்மீது பாடிய விநாயகர் திருப்பதிகமும் இந்நூலினை அணி செய்கின்றது. ஆசிரியரின் இப்பணி சைவ உலகுக்கு ஒரு வரப்பிரசாதம் எனில் மிகையில்லை.

அன்பர் திரு. நடராசா அவர்களின் இத்தகைய கைங்கரியம் மேலும் பல ஆலய வரலாறுகளை எழுதும் அளவிற்கு விரிவு பெறவும் சிறக்கவும் எல்லாம்வல்ல விநாயகப்பெருமானின் திருவருள் துணை நிற்பதாகுக.

இந்து நாகரிகத்துறை — ப. கோபாலகிருஷ்ணன்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி
7 - 7 - 1989

உ
சிவமயம்

# ஆனைவிழுந்தான் விநாயகர் ஆலய வரலாறு

கீரிமலைச் சிவன்கோயிலுக்கு முற்பக்கத்திலிருந்து தெற்கு நோக்கிச் செல்லும் நகுலேசுவரர் வீதியில் ஏறக்குறைய இரண்டு கிலோமீற்றர் தொலைவிலிருக்கும் ஆலடிச்சந்தியிலிருந்து மேற்கே செல்லும் வீதியில் ஒரு கிலோமீற்றர் தொலைவில் வீதியின் தென்புறத்தில் அமைந்திருக்கிறது இளவாலை ஆனைவிழுந்தான் விநாயகர் ஆலயம். இளவாலைச் சித்திரமேழிச் சந்தியிலிருந்து கிழக்குத் திசையாக ஏறக்குறைய ஒரு கிலோமீற்றர் தூரம் ப்ரயாணஞ் செய்தும் இவ்வாலயத்தை அடையலாம்.

'குதிரைமுகம் போன்ற விகாரமான தன்முகமும், குன்மநோயும் நீங்கவேண்டித் தலயாத்திரையுந் தீர்த்த யாத்திரையுஞ் செய்துவந்த சோழ தேசாதிபதியாகிய திசையுக்கிர சோழனது மகள் மாருதப்பிரவல்லி, இப்பொழுது சுழிபுரம் என வழங்கும் சோழிபுரத்தில் இறங்கி, நகுலேஸ்வரத்துக்குச் செல்லும் வழியில் ஓரிடத்தில் அவள் ஏறிச்சென்ற யானை விழுந்து வணங்கியது. அவ்விடத்தில் ஒரு விநாயகர் விக்கிரகம் காணப்பட்டது. ஆனை விழுந்து வணங்கிய காரணத்தால் அவ் விநாயகப் பெருமான் ஆனைவிழுந்தான் விநாயகர் என அழைக்கப்பட்டார். ஆனை விழுந்து வணங்கிய இடம் ஆனைவிழுந்தான் என அழைக்கப்படுகின்றது.' என்பது ஒரு கர்ணபரம்பரைக் கதை.

''இளவாலை வடக்கு (சித்திரமேழி) — பன்னாலை வீதியில் ஆனைவிழுந்தான் என்ற இடமும் ஆங்கொரு பிள்ளையார் கோயிலும் உள்ளன. இவை கீரிமலை சேந்தான்குளம் கிராமங்களை அயலாகக் கொண்டன. இப்பிரதேசங்களில் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் பற்றியும் மாருதப்பிரவீகவல்லி கதை பற்றியும் பெரிதும் பேசப்படுவதால் சோழ அரசியான மாருதப்பிரவீக வல்லியின் யானை விழுந்து இறந்த இடமே ஆனைவிழுந் தான் என்ற இடம் எனக் கருதப்படுகிறது'' 1 என்கிறார் கலாநிதி. இ. பாலசுந்தரம்.

முன்னொரு காலத்தில் இளவாலையைச் சேர்ந்த சிலர் தென்னிந்தியாவுக்குத் தலயாத்திரைக்காகச் சென்றிருந்தனர். அவர்கள், மாருதப்பிரவல்லியோடு அவளின் தோழிகளாக நகுலேஸ்வரத்துக்கு வந்து, பின்பு தம்நாடு திரும்பிய மூதாட்டிகள் சிலரை அங்குச் சந்தித்து உரையாடினார்கள், அவ்வுரையாடலின்போது அம்மூதாட்டிகள்.

**''ஆனை விழுந்தானில் அரசமரம் நிற்கிறதா?**
**பொக்கலந் தம்பையிற் புளியமரம் நிற்கிறதா?**
**சத்துருக்கன் வாய்க்காலிற் சவுக்கமரம் நிற்கிறதா?'**

எனவும் விசாரித்தார்கள் என்பது இன்னொரு கர்ண பரம்பரைக்கதை. இக்கதை, மாருதப்பிரவல்லியின் தோழிகள், நகுலேஸ்வரத்தைச் சூழவுள்ள கிராமங்களை நன்கு அறிந்திருந்தார்கள் என்பதையும், அவர்கள் இங் கிருந்த மக்களோடு கொண்டிருந்த நெருக்கமான தொடர்பையும், ஆனைவிழுந்தான் விநாயகர்மீது அவர் கள் கொண்டிருந்த பத்தியையும் எடுத்துக்காட்டி, முன்பு கூறப்பட்ட கர்ணபரம்பரைக் கதைக்குச் சான்று பகர்வதுபோல அமைகிறது. 'ஒருநாள், மாருதப்பிரவல்லியின் யானை பாகர்களுக்கடங்காமல்

மதங்கொண்டோடி அட்டகாசஞ் செய்தது. அதைத் தொடர்ந்து சென்ற பாகர்கள் தாற்றுக் கோல்களாற் குத்தியும், வேல், ஈட்டி முதலிய ஆயுதங்களை அதன் மீது எறிந்தும் அதை அடக்க முயன்றனர். அவர்களின் முயற்சி பயனற்றுப்போனது. ஆனையின் உடலிற்றைத்த ஆயுதங்கள் அதனுடலில் முளைத்த முட்களைப்போலத் தோன்ற, வேதனை பொறுக்க முடியாமல் ஓடித்திரிந்த யானை இறுதியில் ஓரிடத்தில் விழுந்து இறந்தது. யானை முள்ளானைபோல ஓடித்திரிந்த இடம் முள்ளானை எனவும், அது விழுந்த இடம் ஆனைவிழுந்தான் எனவும் அழைக்கப்படுகின்றன.' இது இன்னொரு கர்ணபரம்பரைக் கதை.

இக்கதையிலும், ''மாருதப்பிரவல்லியின் யானை விழுந்து இறந்த இடமே ஆனைவிழுந்தான் என்ற இடமெனக் கருதப்படுகிறது.'' என்னும் கலாநிதி பாலசுந்தரத்தின் கூற்றிலும் ஒருவித ஒற்றுமை காணப்படுகிறது.

இக்காரணங்களால் மாருதப்பிரவல்லியின் யானை விழுந்து இறந்த இடமே ஆனைவிழுந்தான் என அழைக்கப்படுவதாகச் சிலர் கருதுகின்றனர். இருந்தபோதிலும் வரலாற்றுசிரியர்கள் இக்கூற்றை ஏற்றுக்கொள்வதாகத் தெரியவில்லை.

''யாழ்ப்பாணத்து ஐதிக இளவரசியாகிய மாருதப்புரவல்லி தனது யானையில் இவ்வழியாக மாவிட்டபுரம் நோக்கிச் சென்றுகொண்டிருந்தபொழுது, அந்த யானை இந்த இடத்தில் விழுந்துவிட்டதாகவும் பின்னர் இத்தலத்தின் மகிமையறிந்து மாருதப்புரவல்லி இப்பிள்ளையாரை வழிபட்டாளென்றும், இதனல் இவ்விடம் ஆனை விழுந்தான் எனப் பெயர் பெற்றதாகவும் கூறப்பட்டது. 2'' என்கிருர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை விரிவுரையாளர் கலாநிதி. பொ. இரகுபதி அவர்கள்.

'ஐதிகம்' என்னுஞ் சொல்லுக்குத் தொன்றுதொட்டு வழங்கிவரும் கதை (உ+ம்: இந்த மரத்தில் பேய் இருக்கிறது) — கேள்வி வழக்கு என்பது பொருள்.

சிவபெருமான் எல்லாம் வல்லவர் என நம்புவோர், நகுலேஸ்வரப் பெருமானின் திருவருளினுல் மாருதப் பிரவல்லியின், குதிரை முகம் அழகிய மனிதமுகமாக மாறியிருக்கலாம் என நம்புகிருர்கள். அதனுல் மாருதப் பிரவல்லியின் கதையை ஒரு வரலாற்று நிகழ்ச்சியாகக் கருதுகிருர்கள்.

வரலாற்று ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், மாருதப்பிரவல்லியின் வரலாற்றை உறுதி செய்வதற்கு, அவர்களுக்குச் சரித்திரச் சான்றுகள் கிடைக்கவேண்டும். அவை கிடைக்காதவரை மாருதப்பிரவல்லி ஐதிக இளவரசியாகவே இருப்பாள். ஆனைவிழுந்தான் விநாயகர் ஆலயத்தை அமைத்து அவள் வழிபட்டாள் என்பதும் ஐதிகமாகவேயிருக்கும். அதனுல் ஆனைவிழுந்தான் ஆலயத்துக்கும் மாருதப்பிரவல்லிக்குமுள்ள தொடர்பு வரலாற்றுத் தொடர்புடையதா இல்லையா என்பதை, ஆய்வுகளின் மூலம் வரலாற்ருய்வாளர்களே முடிவு செய்யவேண்டும்.

ஆனுலும் ஆனைவிழுந்தான் பற்றிய சில கருத்துக்களை இங்குக் குறிப்பிடுவது அவசியமாகும்.

i. மாருதப்பிரவல்லியின் குதிரைமுகம் மனித முகமாக மாறியமை காரணமாக, 'மாவிட்டபுரம்' எனப் பெயர் பெற்ற திருத்தலத்தின் வரலாற்றில், ''அங்கசுந்தரி'' * முனிவரது பாதங்களில் வீழ்ந்து நமஸ்கரித்து இவ்வியாத்திரைக்கான ஏற்பாடுகளைச் செய்தாள். காவிரிப்பூம் பட்டினத் துறையிலிருந்து புறப்பட்டு இந்துசமுத்திரம் எனும் மகேந்திரக் கடலிற் குளித்து, தெற்கே ஏமகூடம் எனப் பெயர் பெற்ற சுப்பிரமணிய துவாதசாந்தத் தலமாகிய கதிர்காமத்திற்குச் சென்று, மாணிக்க கங்கையிற் றீர்த்தமாடிக் கதிரை

வேற்பெருமானை வணங்கி வருவாளாயினள். அங்கேயும் ''வடகோடியிலே கடற்கரையில் திவ்விய தீர்த்த மொன்றுளது. ஆங்குச் சென்று காங்கேயனை அன்புடன் நினைந்து மூழ்குவையேல் நின் எண்ணம் நிறைவுறும்'' என அசரீரி கூறிற்று.

அங்கசுந்தரியும் மகிழ்ச்சியுற்று வடகடற்றுறையடைந்து கீரிமலைச் சாரலில் வந்திறங்கி வளவர்கோன் எனும் இடத்திற் பாளையம் போட்டிருந்து தனது விரதத்தை அனுஷ்டிப்பாளாயினுள். 3'' எனக் கூறப்படுகிறது. இக்கூற்று மாருதப்பிரவல்லி சோழிபுரத்திலிறங்கி, யானை மேலேறி ஆனைவிழுந்தான் வழியாக மாவிட்டபுரஞ் சென்றுளெனக் கூறப்படும் கர்ணபரம்பரைக் கதையுடன் முரண்படுவதாகவே அமைகின்றது.

ii. பண்டைக்காலத்தில் தமிழரசிகள் யானையேற்றம் பழகியதாகவோ யானைமீதேறிப் பிரயாணம் செய்ததாகவோ கூறுவதற்குரிய சான்றெதுவும் இல்லை. அதனுல் மாருதப்பிரவல்லி யானைமீதேறிச் சோழிபுரத்திலிருந்து மாவிட்டபுரத்துக்குச் சென்றுள் எனக் கூறுவதை உண்மையானதென இலகுவில் ஒப்புக் கொள்ள முடியாது.

iii. திசையுக்கிர சோழன் தன்மகளைத் தீர்த்த யாத்திரை செய்ய அனுப்ப, அவள் யாத்திரைக்குச் சென்ற செய்தியை,

''......பார்த்திபன் மாமகள்
கோல முற்ற பலாக்கிற் கொலுவுறச்
சீல முற்றிடு சிந்தையி னேகினுள்''

(பலாக்கு—பல்லக்கு)

எனவே நகுலகிரிப்புராணம் 4 கூறுகின்றது. இதனுலும் மாருதப்பிரவல்லி யானைமீதேறிச் சென்ருள் என்னுங் கூற்று மறுக்கப்படுகிறது.

iv. நகுலகிரிப் புராணத்திலோ, மாவிட்டபுரத் திருத்தல வரலாற்றிலோ மாருதப்பிரவல்லிக்கும் ஆனை விழுந்தானுக்கும் உள்ள தொடர்புபற்றி எதுவுங் கூறப்படவில்லை.

இக்காரணங்களால் மாருதப்பிரவல்லி யானை மீதேறி வந்தாள் என்பதும், அவளது யானை விழுந்து வணங்கிய இடமே ஆனைவிழுந்தான் எனப்படுகிறது என்பதும் சமயவிலக்கிய நோக்கிலும் சரியானதாகத் தெரியவில்லை.

அதனுல் யானை இறந்த இடம், அல்லது விழுந்து வணங்கிய இடம் ஆனைவிழுந்தான் என அழைக்கப்படுகிறது எனக் கருதுவது பொருத்தமற்றதாகும்.

நோய் நீங்கிக் குணமடைந்து, அழகிய அரசிளங் குமாரியாக விளங்கிய மாருதப்பிரவல்லியைக் கண்டு காதலித்த உக்கிரசிங்கசேனன் என்னும் அரசன் அவளை மணஞ்செய்தான் என மாவிட்டபுரத் திருத்தல வரலாறு 5 கூறுகின்றது.

இந்த உக்கிரமசிங்கன் கி. பி. ஒன்பதாம் நூற்ருண்டில் வாழ்ந்தவன் எனவும்; கதிர்காமத்திலிருந்து அரசுபுரிந்தவனெனவும், தொண்டைமான் உப்பு வியாபாரஞ்செய்ய உதவுவதற்காக தொண்டைமாஞற்றை வெட்ட அவனுக்கு அனுமதி கொடுத்தவனெனவும் யாழ்ப்பாண வைபவமாலையில் 6 தரப்படுந் தகவல்களால் அறியமுடிகின்றது.

ஆனாலும் யாழ்ப்பாண வைபவமாலை தருந் தகவல்களை வரலாற்றுச் சான்றுகளாக ஏற்றுக்கொள்ளலாமா இல்லையா என்பதை வரலாற்றாசிரியர்களே தீர்மானிக்க வேண்டும்.

சாபநீக்கம் பெற்ற மாருதப்பிரவல்லி நகுலேஸ்வரத்தின் சூழலில், முதலிற் கொல்லங்கலட்டி வீரகத்தி விநாயகர் ஆலயத்தை அமைத்ததுடன், மேலும் ஆறு விநாயகர் ஆலயங்களை அமைத்தாளெனவும், அவற்றுளொன்று ஆனைவிழுந்தான் விநாயகர் ஆலயமெனவும் கர்ணபரம்பரையாகக் கூறப்படுகின்றது. ஆனாலும் இக் கூற்றை ஏற்றுக்கொள்வதற்குரிய ஆதாரம் எதுவுங் கிடைக்கவில்லை.

மாருதப்பிரவல்லிக்கும் ஆனைவிழுந்தான் விநாயகர் ஆலயத்துக்கும் தொடர்பு உண்டு என்பதை ஏற்றுக் கொண்டால், இவ்வாலயம் கி. பி. 9ஆம் நூற்றாண்டில் அல்லது அதற்குமுன் அமைக்கப்பட்டிருக்க வேண்டும் எனக் கருதலாம். ஆனால், இன்று இங்கிருக்கும் ஆலயத்தின் வரலாறு ஏறக்குறைய எண்பதாண்டு காலப் பழமை வாய்ந்ததாகவே கருதப்படுகின்றது.

இருந்தபோதிலும், இன்றைய ஆலயத்துக்குச் சுற்றுமதில் அமைப்பதற்கு அத்திவாரம் வெட்டிய போது, அங்கு பழைய செங்கட்டிகள் காணப்பட்டமையும், ஆலயத்தின் தென்மேற்குத் திசையில், உள்வீதிக்கு வெளியே, பாழடைந்திருந்து, அண்மைக்காலத்தில் மூடப்பட்ட கிணறும், ஆலய வளாகத்திற் காணப்பட்ட பழமை வாய்ந்த பொருட்களும் பல்லாண்டுகளுக்கு முன்பு இங்கு ஆலயமொன்றிருந்தமைக்கான சான்றுகளாக அமைகின்றன.

ஆலய முன்றிலில் நிற்பதும், ஆலயத்தின் தல விருட்சமெனக் கருதப்படுவதுமான அரசமரத்தின் அடியிலுள்ள மண்மேடு, இவ்வாலயத்தின் பழமையைப் பறைசாற்றும் இன்னொரு சான்றாகும்.

ஆலயத்தின் அயலிலுள்ள கொன்றை மரத்திற்றங்கியிருந்து ஸப்த கன்னிகைகள் (பிராமி, மகேசுவரி, கௌமாரி, வைஷ்ணவி, வாராகி, இந்திராணி, சாமுண்டி) ஆனைவிழுந்தான் விநாயகனை வழிபடுகிறார்கள் என்பது ஐதிகம். இக்காரணத்தால், இராக்காலத்தில் இவ்வாலயத்தின் அயலிற் செல்வதற்கும் இவ்வூரவர்கள் அஞ்சுகிறார்கள்.

ஆலயத்தின் தலவிருட்சமான அரசமரத்தின்கீழ் ஏழு கிடாரம் பொன் இருப்பதாகவும், அதை ஒரு தேவதை காவல் செய்வதாகவும், ஏழு கன்னிப் பெண்களைப் பலியிட்டாலன்றி அதை எடுக்க முடியாதெனவும் இன்னொரு கதை கர்ணபரம்பரையாகக் கூறப்படுகின்றது. இக்காரணத்தாலும் ஆலயத்தின் தலவிருட்சம் என்பதாலும், இவ்வாலயத்தை அழகுற அமைப்பதற்குத் தடையாகவிருந்தும் இவ்வரசமரம் இன்றும் வாழ்ந்து வருகின்றது.

'சில ஆண்டுகளுக்கு முன்வரை இவ்வரசமரத்தடியிலுள்ள புற்றுகளிற் பாம்புகள் வாழ்ந்துவந்தன. அவை ஆலயத்துக்கு வழிபட வரும் அடியார்களுக்கு எவ்வித தீங்குமிழைக்காத காரணத்தால், இங்கு வருவோர் அவை காரணமான அச்சமெதுவுமின்றி, ஆலயத்துக்கு வந்து சென்றார்கள். அரசமரத்தடியைக் கூட்டும்போது, குறுக்கே வெண்ணிற நாகபாம்புகள் வரும். ஆலயத்தைக் கூட்டுபவர் அவற்றைத் தூக்கி வேறிடத்தில் விட்டுவிட்டுக் கூட்டினார். இது இங்கிருந்தருள்புரியும் நாகதம்பிரானின் புதுமை' என்கிறார்கள் முதியவர்கள்.

1983ஆம் ஆண்டில் ஒருநாள், தொல்லியல் மேலாய்வை மேற்கொண்டு, தன் கிளைகளை மாத்திர மன்றிப் பல்வேறு இரகசியங்களையுந் தாங்கி, பேச வேண்டிய தன் பெருமைமிகு வரலாற்றைப் பேசாமல் ஓங்காரப் பொருளான கணபதியைக் கருத்திருத்தி, மோன முனிவரைப்போல முன்னிற்கும் அரசமரத்தடியி லிருந்து, பழைய காலத்திற்குரிய, கைவிரல்களினாற் பள்ளமிடப்பட்ட கூரையோடுகளின் துண்டங்களையும், தடித்த விளிம்புடைய மட்பாண்டங்களின் உடைந்த துண்டுகளையும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறை விரிவுரையாளர் கலாநிதி பொ. இரகுபதி கண் டெடுத்தார்.

அவற்றை ஆய்வு செய்த கலாநிதி, ''ஆனைவிழுந்தா னில் கிடைத்த தடயங்கள் இரு தகவல்களைத் தந்துள் ளன. ஒன்று, அங்கு கட்டிடமொன்று இருந்தமை. மற்றையது அது கி. பி. 6—10 நூற்றாண்டுக்கு உரித் தாகலாம் என்பது 7'' என்கிறார்.

ஆனைவிழுந்தானில் வேறு ஏதாவது கட்டிடம் இருந்ததாகக் கூறப்படும் கர்ணபரம்பரைக் கதைகூட வழங்காமையாலும், இவ்வாலயத்தை மாத்திரமன்றி நகுலேஸ்வரத்தின் சூழலில் எல்லாமாக ஏழு விநாயகர் ஆலயங்களை மாருதப்பிரவல்லி அமைத்தாள் எனக் கூறப்படுவதனாலும், மாருதப்பிரவல்லியின் காலமென யாழ்ப்பாண வைபவமாலை குறிப்பிடும் காலமும், ஆலயச் சூழலில் மேற்கொள்ளப்பட்ட தொல்பொருள் மேலாய்விலிருந்து இங்கிருந்த கட்டிடம் கட்டப்பட்ட காலமெனக் கண்டறியப்பட்ட காலமும் ஒரே கால மாயிருப்பதனாலும், இங்கிருந்த கட்டிடம் ஆனைவிழுந் தான் விநாயகர் ஆலயமெனத் துணியலாம்.

அன்னியர் ஆட்சிக்காலத்தில் இங்கிருந்த சைவாலயங்கள் அழிக்கப்பட்டதுபோல இவ்வாலயமும் அழிக்கப்பட்டு, ஆலயச்சொத்துக்களும் அழிக்கப்பட்டோ அல்லது அபகரிக்கப்பட்டோ இருக்கலாம்.

தமது ஆலயம் அழிக்கப்படப்போகிறது என்பதை அறிந்தவுடன், சைவாபிமானமும் இறைபக்தியும் மிக்க எமதுமூதாதையர் தத்தமது ஆலயத்திலுள்ள தெய்வத் திருவுருவங்களையாவது காப்பாற்றும் நோக்குடன் அவற்றை எடுத்துச் சென்று மறைத்து வைத்தார்கள். அவர்களால் ஒளித்து வைக்கப்பட்ட திருவுருவங்கள் பல கண்டெடுக்கப்பட்டு, மீண்டும் ஆலயங்களிற் பிரதிட்டை செய்யப்பட்டிருக்கின்றன. எம் முன்னோர் தம் ஆலயங்கள் அழிக்கப்படமுன் அங்கிருந்த விக்கிரகங்களை எடுத்து மறைத்து வைக்காதிருந்தால் அவையும் அழிக்கப்பட்டிருக்கும். பழைய ஆலயங்களை மீளமைக்கும் வாய்ப்பு எமக்குக் கிடைத்திருக்காது.

ஆனைவிழுந்தான் விநாயகர் ஆலயத்தைப் பொறுத்தவரையில், அவ்விடத்தில் முன்பிருந்த ஆலயம் அழிக்கப்பட்டமை பற்றியோ, அங்கிருந்து தெய்வத்திருவுருவங்கள் அகற்றப்பட்டமை பற்றியோ, அத்திருவுருவங்கள் ஏதாவது, எங்கிருந்தாவது கண்டெடுக்கப்பட்டமை பற்றியோ எதையும் அறிய முடியவில்லை. இருந்தபோதிலும் ஆனைவிழுந்தான் விநாயகர் ஆலயம் மீளமைக்கப்பட்டிருக்கிறது.

'இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்து, தலவிருட்சமான அரசடியில் வைத்து வணங்கப்பட்டு வந்த தெய்வத் திருவுருவே அழிக்கப்பட்ட ஆலயத்தின் மூலமூர்த்தியாயின் ஆலயம் அழிக்கப்பட்டபோது இத்திருவுருவம் அழிக்கப்படாமலிருந்தது எப்படி? என்னும் வினா எழுகின்றது. இவ்வினாவுக்கு விடை காண

பது இலகுவானதல்ல. இங்கு வைத்து வணங்கப்பட்டு வந்த திருவுருவம் அழிக்கப்பட்டிருந்தால், இந்நூற்றூண்டின் ஆரம்பகாலத்திலிருந்து இங்கு வணங்கப்பட்டுவந்த திருவுரு வேறென்றாகவே இருக்கவேண்டும்.

அப்படியானால், இங்குள்ள லிங்க வடிவிலமைந்த திருவுருவைத் தாபித்தவர் யார்? இவ்வுரு எப்போது தாபிக்கப்பட்டது? இவ்வினாக்களுக்குரிய விடை தெரியவில்லை.

அன்றைய சூழ்நிலையின் தாக்குதலும், அதுகாரணமாகச் சிவ வழிபாட்டையும் சைவாலயத் தாபனத்தையும், அச்சத்துடனும் அந்தரங்கமாக்வும் செய்யவேண்டியிருந்தமையுமே இவ்வினாக்களுக்கு விடைகாண முடியாமைக்குரிய காரணங்களாகும்,

இன்றைய ஆலயம் பண்டைய ஆலயக்கட்டிடம் இருந்த இடத்திற்றான் இருக்கிறதெனவும் திட்டவட்டமாகக் கூற முடியாது. இன்றைய ஆலயத்தின் முன்பக்கத்தில், ஆலயத்தை அழகாக அமைப்பதற்குத் தடையாகத் தலவிருட்சம் நிற்பது காரணமாகப் பண்டைய ஆலயம் இன்றைய ஆலயமிருக்குமிடத்தில் இருந்திருக்க முடியாதெனப் பலர் கருதுகின்றனர்.

இந்த நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து இங்கு வைத்து வழிபாடு செய்யப்பட்டு வந்ததும், இன்றும் ஆலயத்திற் காணப்படுவதுமான திருவுருவம் ஏறக்குறைய ஒரு சிவலிங்கத்தின் தோற்றமுடையதாகவே காணப்படுகின்றது. இவ்வாலயத்தின் மூலமூர்த்தியாக விநாயகப்பெருமானின் திருவுருவம் பிரதிட்டை செய்யப்பட்ட காலம் வரையும் இவ்வுருவை விநாயகப்பெருமானின் உருவமெனக்கொண்டே முன்னோர் வழிபாடும் பூசனையும் புரிந்துவந்தார்கள். இன்றும் அந்நிலை தொடருகிறது.

கி. பி. 8ஆம் நூற்றுண்டுக்கு முற்பட்டதெனக் கருதப்படும் காங்கேசன்துறைக் கயாத்துறைப் (காசாத்துறை) பிள்ளையார் கோயிலிற் காணப்படும் மூலமூர்த்தியின் திருவுருவம் ஏறக்குறைய ஒரு சிவலிங்கப் பெருமானின் தோற்றமுடையதாகவே காணப்படுகின்றது.

கயாத்துறை ஆனந்தப்பிள்ளையார் துதியும்,

"ஓம் வடிவமாகிய விநாயகக் கடவுளே
உன்னைச் சரண் புகுந்தேன்
உள்ளத்தில் உள்ளபடி உலகெலாம் உனை
உயிர்த் தொகுதியாய் உய்த்துணர்ந்தேன்
தீம்புனலிசைத்து வரும் சிவபாதமலையெனத்
தெரிசனமளித்து நிற்பாய்
வடஇலங்கைக் கரைதனிலே லிங்கமாய் வந்து
திருவருள் காட்டி நின்றுய்" 8 எனவே அமைந்திருக்கிறது.

இந்த இரண்டு விநாயகர் ஆலய மூர்த்திகளும் ஒரேவிதமாக அமைந்திருக்கும் காரணத்தால், இவ்விரு திருவுருவங்களும் ஒரு காலப்பகுதியில் அமைந்தனவாயிருக்கலாமெனக் கருத இடமுண்டு. இதுவும் இவ்வாலயம் கி. பி. 6—10ஆம் நூற்றுண்டுக் காலத்தில் அமைக்கப் பட்டிருக்கலாமெனக் கருதுவதற்குரிய இன்னெரு சான்றுகும்.

ஆனைவிழுந்தானிலும் கயாத்துறையிலுமிருக்கும் திருவுருவங்கள் சிவலிங்கப் பெருமானின் வடிவிலமைந்திருக்கின்றபோதிலும், இவ்விடங்களில் வாழும் மக்கள் இன்றுவரை இவ்வுருவங்களை விநாயகரெனக் கருதி வணங்கி வருகின்றூர்கள். இதற்குரிய காரணம் இன்னதெனத் தெரியவில்லை.

பிரபல வழிபாட்டுத்தலங்கள் சிலவற்றின் பெயர்கள், ஆங்காங்கு கோயில்கொண்டிருக்கும் தெய்வங்களின் பெயரால் அல்லது அப்பெயரோடு தொடர்புடைய பெயரால் அழைக்கப்படுவது வழக்கம். இதற்கு உதாரணமாக நகுலேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், வல்லிபுரம், துர்க்காபுரம், நாச்சிமார்கோயிலடி, கந்தவனக்கடவை முதலிய இடங்களைக் குறிப்பிடலாம்.

வேறுசில கோயில்களின் பெயர்கள், கோயில் அமைந்திருக்கும் இடப்பெயரோடு தொடர்புபடுத்தி அழைக்கப்படுகின்றன. நல்லூர்க் கந்தசுவாமி கோயில், நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோயில், மட்டுவில் பன்றித்தலைச்சிக் கண்ணகை அம்மன் கோயில், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில், ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் கோயில் என்பன, கோயிலின் பெயர், கோயிலிருக்கும் இடப்பெயரோடு தொடர்புபடுத்தி அழைக்கப்படுவதற்கு உதாரணங்களாகும்.

ஆனைவிழுந்து வணங்கிய காரணத்தால் இவ்விநாயகர் கோயிலிருக்கும் இடம் 'ஆனைவிழுந்தான்' என்னும் பெயரால் அழைக்கப்படுகிறது என்பதற்குரிய ஆதாரம் எதுவும் இல்லாமையால், இங்கு கோயில் கொண்டெழுந்தருளி யிருக்கும் விநாயகப் பெருமானது திருநாமத்தின் தொடர்பினால் இவ்விடம் 'ஆனைவிழுந்தான்' என அழைக்கப்படுகிறதென்பதே பொருத்தமானதாகும்,

'ஆனைவிழுந்தான்' என்பதை,
ஆன் + ஐ + விழும் + தான் எனப் பிரித்து
ஆன் + விழும் + ஐ + தான் எனக் கொண்டுகூட்டுவோம்.
ஆன் — உயிர்—பசு
ஐ—இறைவன்
விழும்—பதியும்—சத்திநிபாதத்தை அருளும்.

எனவே 'ஆனைவிழுந்தான் விநாயகர்' என்பதற்கு, (இருவினை ஒப்பும் மலபரிபாகமும் அடைந்த) உயிர்களுக்குச் சத்திநிபாதத்தை அருளி, முத்தியைக் கொடுக்கும் இறைவனே தானாகிய விநாயகப்பெருமான் என்பது பொருள். அதனால் இத்தலத்தில் இருந்த நள்புரியும் இறைவனது திருநாமங் காரணமாக இவ்விடம் 'ஆனைவிழுந்தான்' எனப் பெயர் பெற்றிருக்கவேண்டுமெனத் துணியலாம்.

முருகன் பெருமையைச் சிவபெருமான் உமாதேவியாருக்குக் கூறிய கூற்றாகப் பாடப்பட்ட,

**"ஆதலின் நமது சத்தி அறுமுகன் அவனும் யாமும்**
**பேதக மன்றால் நம்போற் பிரிவிலன் யாண்டும் நின்றான்**
**ஏதமில் குழவி போல்வான் யாவையு முணர்ந்தான் சீரும்**
**போதமும் அழிவில் வீடும் போற்றினர்க் கருள**
**வல்லான் 9"**

என்னும் கந்தபுராணச் செய்யுளை இச்சந்தர்ப்பத்தில் ஞாபகஞ்செய்வோம். இச்செய்யுள் விநாயகப் பெருமானைப் பொறுத்தவரையிலும் பொருத்தமானதாகும்.

திருநாவுக்கரசு நாயனார் திருப்புகலூரில் திருப்பதிகம் பாடியபோது, ஒரு பாடலை 'அங்கமே பூண்டாய்' என அடியெடுத்து, 'சிங்கமே உன்னடிக்கே போதுகின்றேன் திருப்புகலூர் மேவிய தேவ தேவே' என முடித்தருளினார். இப்பாடல் காரணமாக, இறைவன் சிங்க வடிவாக வந்து நாவுக்கரசு நாயனாரை உண்டானென ஒரு கற்பனைக்கதை உருவானது, அக்கதையைப் பின்னணியாகக்கொண்டு, அதைச் சித்திரிக்கும் உருவங்கள் செதுக்கப்பட்டுத் திருப்புகலூர் மதிற்சுவரில் வைக்கப் பட்டிருக்கின்றன. சிங்கமாகிய இறைவன் அப்பரைக்கடிக்க, அப்பர் 'வலிக்கிறதே' எனக் கூறியதாகவும் கூறப்படுகிறது. திருப்புகலூர்த் தலபுராணமும் இக்கதையைக் கூறுகிறது. அப்பர் குருபூசைத் திருநாளில் இந்நிகழ்ச்சியைச் சித்திரித்துக் காட்டும் தவறான விழாவொன்றும் அங்கே நடைபெறுகிறதெனத் தெரிய வருகின்றது.

அதுபோல 'ஆனைவிழுந்தான்' என்னுஞ் சொற்றொடருக்கு விளக்கம் அளிக்கும் வகையில், கற்பனை வளம் நிறைந்த, மாருதப்பிரவல்லியின் ஆனை விழுந்த கதை உருவாக்கப்பட்டிருக்கலாம் எனவே கருதவேண்டியிருக்கிறது.

ஸப்த கன்னிகளும் தம்மை வழிபாடு செய்ய, பல்லாண்டுகாலம் அரசமரத்தடியிலும், பின்பு சிறு குடிலிலும் எழுந்தருளியிருந்த விநாயகப் பெருமானுக்கு இருபதாம் நூற்றுண்டின் இரண்டாம் தசாப்தத்தில், ஆலயம் இப்போதிருக்கும் இடத்தில், சுண்ணும்புங் கல்லுங்கொண்டு மடாலயம் அமைக்கப்பட்டது. ஆரம்பத்தில் ஓலையால் வேயப்பட்ட இம்மடாலயம் பின்பு ஓட்டால் வேயப்பட்டது.

அம்மடாலயத்தில், அரசமரத்தடியில் வைத்து வழி வழியாக வணங்கப்பட்டு வந்த விநாயகப்பெருமானின் திருவுருவம் பிரதிட்டை செய்யப்பட்டது.

பாலியடைப்பான் என அழைக்கப்படும் தம்பர் சின்னத்தம்பி என்னும் பெரியார் ஆலயத்துக்குச் சுற்றுமதிலும் மணிக்கோபுரமும் அமைத்தார்.

1938ஆம் ஆண்டு மார்ச்சு மர்தம் 6ஆம் நாள் தம்பர் சின்னத்தம்பி அவர்கள் நொத்தாரிசு சீனிவாசகம் இளையதம்பி முகதாவில் 1286, 1287 என்னும் இலக்கங்களைக் கொண்ட இரண்டு உறுதிகளை எழுதினர்.

மேலே குறிப்பிட்ட 1286ஆம் இலக்க உறுதிப்படி சோடக்கனிலுள்ள 12 பரப்புக் காணி ஆனைவிழுந்தான் விநாயகர் ஆலயத்துக்குச் சொந்தமானது.

இரண்டாவது உறுதிமூலம் சோடக்கனிலுள்ள 24 பரப்புக் காணியையும் அதில் அமைந்துள்ள வீட்டையும் ஆலயத்துக்கு உரிமையாக்கிய திரு. சின்னத் தம்பி அவ்வுறுதியில் இரண்டு நிபந்தனைகளை விதித்துள்ளார். முதலாவது நிபந்தனை, ஆலயத்துக்குப் பூசை செய்பவருக்கு, அவர் ஆலயத்தின் பூசகராகக் கடமையாற்றுங் காலம் வரையும், அவ்வீட்டில் வசிக்கவும் காணியிலுள்ள வரும்படியை எடுக்கவும் அதிகாரம் அளிக்கின்றது.

இரண்டாவது நிபந்தனை வேதாரணியத்திலிருந்து கீரிமலைக்கு யாத்திரிகர்களாக வரும் சைவக்குருமார் தங்குவதற்காக, அவர்கள் இங்கு இருக்குங் காலம்வரை வீட்டிலுள்ள ஒரு அறையை அவர்களுக்குக் கொடுத்துதவ வேண்டுமென்பது.

இதிலிருந்து இந்த நூற்றாண்டிலும் வேதாரணியத்துச் சைவக் குருமார் கீரிமலைக்கு யாத்திரிகர்களாக வந்தார்கள் என்பதையும், அவர்கள் தாம் தங்குவதற்கேற்ற இடமாக ஆனைவிழுந்தானின் அயலிடங்களைத் தேர்ந்தெடுத்தார்கள் என்பதையும், அதனால் இவ்வாலயச் சூழலில் சைவாசார சீலர்கள் வாழ்ந்து வந்தார்கள் என்பதையும் உணர முடிகின்றது.

சிறந்த சிவபத்தரும் ஆன்குலத்தை அரனெனப் போற்றும் பண்பினருமான தம்பர். கந்தப்பிள்ளை உபாத்தியாயர், ஆரம்பத்தில் ஆனைவிழுந்தான் விநாயகப் பெருமானுக்குப் பூசனை புரிந்துவந்தார். அவரைத் தொடர்ந்து வேலையர் என அழைக்கப்பட்ட வயிரவி. வேலுப்பிள்ளைப் பண்டாரம் விநாயகப் பெருமானுக்குப் பூசை செய்தார்.

1935ஆம் ஆண்டளவில் ஆகமவிதிப்படி ஆலயத்தை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஸ்ரீ. தி. நடராச ஐயர் என்னும் பிராமணர் ஆலயத்துக்குப் பூசை செய்யத் தொடங்கினர். மடாலயத்துக்கு அயலில் அமைக்கப்பட்டதும், தகரத்தால் வேயப்பட்டதுமான பாலாலயத்தில் விநாயகப்பெருமான் பிரதிட்டை செய்யப்பட்டார். கருவறை, அர்த்தமண்டபம், மகா மண்டபம் என்பவற்றின் கட்டிடவேலைகள் நடைபெற்றுக்கொண்டிருந்தன.

விக்கினேஸ்வரப் பெருமானுக்கு மஹா கும்பாபிஷேகம் செய்யவேண்டிய நேரம் நெருங்கிக்கொண்டிருந்தது. கும்பாபிஷேகம் செய்தபின் நடைபெறும் விழாக்களின்போது விநாயகப் பெருமான் உள்வீதி வழியாகவும் வெளிவீதி வழியாகவும் ஆலயத்தை வலம்வர வேண்டும். அப்போது ஆலயத்துக்கு வெளிவீதி இருக்கவில்லை. ஆலய மதிலின் நாற்புறங்களிலுந் தனியாருக்குச் சொந்தமான காணிகளே இருந்தன. வடக்குப் பக்கத்திலிருந்த காணி புறமதத்தார் ஒருவரின் சொத்தாக இருந்தது. இதைக் கருத்திற்கொண்டு, ஆலய விழாக்களைச் சிறப்பாக நடத்துவதில் ஏற்படக்கூடிய தடைகளைத் தவிர்ப்பதற்காகச் சைவப்பெரியார்களான பொன்னம்பலம் கார்த்திகேசர், கந்தப்பிள்ளை செல்லப்பா, நாகநாதர் செல்லப்பா, வயிரமுத்து கந்தையா என்னும் நால்வரும், மணிக்கோபுரத்துக்கும் ஆலயத்தின் வடமேற்கில் நின்ற இத்திமரத்துக்கும் வடக்குப் பக்கத்திலுள்ள நான்கு பரப்புக் காணியை, விலை கொடுத்து ஆனைவிழுந்தான் விக்கினவிநாயகமூர்த்தி ஆலயத்துக்கு அறுதியாக வாங்கினர்கள்.

பிரசித்த நொத்தாரிசு ஆறுமுகம் பொன்னம்பலத்தால் 1936 - 08 - 09ல் எழுதப்பட்ட 14980ஆம் இலக்க அறுதி உறுதியில் மேற்படி காணியின் தெற்கெல்லையாக வயிரமுத்து கந்தையாவுக்கும் பங்காளருக்கும் உரிய ஆதனமும் விக்கின விநாயகமூர்த்தி கோயிலாதனமும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

இதிற்குறிப்பிடப்படும், விக்கின விநாயகமூர்த்தி கோயிலாதனம், மயிலங்கூடல் வேலுப்பிள்ளை வயிரவப் பிள்ளை என்னும் பெரியாரால் ஆலயத்துக்கு வழங்கப்பட்ட தாகும். இவ்வாதனத்தை அவர் ஆலயத்துக்கு உறுதி யெழுதிக் கொடுக்கவில்லை. தனது ஆதனத்தில் ஆலயம் அமைந்திருந்த பகுதிக்காணியை ஆலயத்துக்குக் கொடுப்ப தாகக் கூறிவிட்டு, மிகுதியை அறுதியாக விற்றூர். *1913*ஆம் ஆண்டு வைகாசிமாதம் *14*ஆம் திகதி நொத் தாரிசு சி. சுப்பிரமணியத்தால் எழுதப்பட்ட *3759*ஆம் இலக்க உறுதி இதற்குச் சான்ருக அமையும்.

ஆலயவிழாவை நடத்துவதற்கு வெளிவீதி ஒழுங்கு செய்யப்பட்டபின் அவ்வாண்டிலேயே ஆலயத்தின் குடமுழுக்குவிழா நடைபெற்றது. கீரிமலை நகுலேஸ்வரர் ஆலய ஆதீனகருத்தாவும் சிவாச்சாரியாருமான சிவஸ்ரீ. தி. குமாரசுவாமிக்குருக்கள், ஆகமவிதிப்படி ஆனை விழுந்தான் விநாயகப்பெருமானை இவ்வாலயத்திற் பிரதிட்டை செய்தார்.

ஸ்ரீ. நடராச ஐயருக்குப்பின் ஸ்ரீ. இராமச்சந்திர ஐயர் ஆலயத்தின் பூசகராகப் பணிபுரிந்தார். அவருக்குப் பின் அவரின் மகன் ஸ்ரீ பாலச்சந்திரசர்மாவிடம் விநா யகப்பெருமானுக்குப் பூசைசெய்யும் பணி ஒப்படைக்கப் பட்டிருக்கிறது.

*1936*ஆம் ஆண்டிற் பிரதிட்டை செய்யப்பட்டதும், திரு. நாகநாதர் செல்லப்பாவினுல் உபகரிக்கப்பட்டது மான விநாயகர் விக்கிரகம் சேதப்படுத்தப்பட்ட காரணத்தால், விநாயகப்பெருமான் மீண்டும் பாலஸ்தா பனம் செய்யப்பட்டார். ஆலயத்தில் நந்தி, பலிபீடம், நிருத்தமண்டபம், தம்பமண்டபம் என்பன அமைக்கப் பட்டன.

*1976 - 09 - 10*ல் நகுலாம்பிகாசமேத நகுலேசுவர ஆலய தருமகருத்தாவும், பிரதம சிவாச்சாரியாருமான சிவ. ஸ்ரீ. கு. நகுலேஸ்வரக் குருக்கள் ஆனைவிழுந்தான் விநாயகரின் குடமுழுக்கு விழாவை நிறைவேற்றினர்.

திரு. கந்தப்பிள்ளை செல்லப்பா ஆலய உற்சவ மூர்த்தியின் விக்கிரகத்தையும் திருமதி. சரஸ்வதி சின்னத்தம்பு சண்டேசுரநாயனரின் திருவுருவையுஞ் செய்வித்து ஆலயத்துக்கு உபகரித்தார்கள்.

இவ்வாலயத்தின் பரிவார மூர்த்திகளான சந்தான கோபாலருக்குத் தலவிருட்சத்தின் அயலில் ஒரு சிற்றாலயமும், வள்ளி தெய்வயானை சமேதரான முருகப் பெருமானுக்கு ஒரு ஆலயமும் அமைத்த திரு. இ. ஏழூர்நாயகம் குடும்பத்தினர் ஆலயத்துக்கென ஒரு திருமஞ்சனக் கிணற்றையும் ஆக்கி அளித்தனர்.

திரு. ஏழூர்நாயகம் தாம் உபகரிக்கும் காணியிலிருந்து பெறும் வருவாயை, முருகன் ஆலய நிருவாகத்துக்கு உதவவேண்டும் என்னும் நிபந்தனையுடன் தமக்குரிய 15 பரப்புக் காணியைத் தன் மகன் ஈஸ்வரத்திடம் ஒப்படைத்தார்.

ஆலயத்தின் ஆழமான திருமஞ்சனக் கிணற்றிலிருந்து நீரெடுப்பதிலுள்ள சிரமத்தைக் கருத்திற் கொண்டு திருமதி. வேதநாயகி அப்புத்துரை நீரிறைக்கும் 'மோட்டார்' ஒன்றை ஆலயத்துக்கு உதவினர்.

திரு. க. இரத்தினம் எழுந்தருளி வாசலிற் சிறிய கொட்டகை ஒன்றை அமைத்தார்.

பிரசித்த நொத்தாரிசு செ. புண்ணியமூர்த்தியால் *1984 - 11 - 30*ல் *2353*ஆம் இலக்கத்தில் எழுதப்பட்ட உறுதிமூலம் திருவாளர்கள் வல்லிபுரம் வயிரமுத்து,

சின்னத்தம்பு கணேசலிங்கம், சின்னத்தம்பு குமார லிங்கம், க. சு. சண்முகலிங்கம் என்பவர்கள் 10 பரப்புக் காணியை ஆனைவிழுந்தான் விநாயகர் ஆலயத்துக்குத் தருமசாதனஞ் செய்தார்கள். அதனால் இன்று ஆலயத்தின் வெளிவீதிகள் ஆலயக் காணியிலேயே அழகாக அமைந் திருக்கின்றன.

1987 - 03 - 20 ல் கருவறையுட் புகுந்து அங்கு தாபிக்கப்பட்டிருந்த இயந்திரத் தகட்டை யாரோ திருடியதால் விநாயகப் பெருமான் மீண்டும் பாலஸ்தா பனஞ் செய்யப்பட்டார். அதைத் தொடர்ந்து ஆலயப் புனரமைப்பு வேலைகள் ஆரம்பமாயின.

கருவறையும் அர்த்தமண்டபமும் அடியார்களிட மிருந்து பெறப்பட்ட நிதியுதவிகொண்டும், மகாமண்ட பம் திரு. நா. சிவலிங்கம் குடும்பத்தினராலும், நிருத்த மண்டபம் திரு. ஆ. தா. ஆறுமுகம் குடும்பத்தின ராலும், முருகன் ஆலயம் திரு. ஏ. ஈஸ்வரம் குடும்பத் தினராலும் புனரமைப்புச் செய்யப்பட்டன.

வசந்தமண்டபத்தை திரு. மு. சிவராசரத்தினம் குடும்பத்தினரும், நாகதம்பிரான் ஆலயத்தை திரு. சு. தில்லைநாதன் குடும்பத்தினரும், சந்தானகோபாலர் ஆலயத்தை திரு. மு. பிரேமதாசன் குடும்பத்தினரும், வயிரவப் பெருமானின் ஆலயத்தை திரு. ம. தியாக ராசா குடும்பத்தினரும் அவர்களது உறவினரும் அமைத்திருக்கின்றனர். யாகசாலை அமரர் வி. நாகலிங்கம் அவர்களின் ஞாபகமாக அமைக்கப்பட்டிருக்கிறது.

வயிரவர் ஆலயத்தில் இதுவரை பிரதிட்டை செய் யப்பட்டிருந்த சூலாயுதத்துக்குப் பதிலாக வயிரவப் பெருமானுடைய விக்கிரகம் பிரதிட்டை செய்யப்பட்டி ருக்கிறது. நந்திக்கும் பலிபீடத்துக்குமுரிய கட்டிடத்தை

திரு. வ. தம்பியனும் வேலுப்பிள்ளை இலட்சுமியும் கட்டுவித்தார்கள். சுற்றுமதிலின் பெரும்பகுதியை திரு. பொ. தருமலிங்கம் குடும்பத்தவர்கள் புனரமைப்புச் செய்வித்தார்கள்.

திரு. க. கதிர்காமத்தம்பியும் திரு. க. சு. சண்முகலிங்கமும் சித்திரமேழி பன்னாலை வீதியிலிருந்து ஆலயத்துக்குச் செல்வதற்கான வீதியை அமைப்பதற்குத் தமது காணியை உதவினார்கள். இன்னும்பலர் இவ்வாலயத்தின் வளர்ச்சிக்காகத் தம்மாலானவரை உதவியிருக்கிறார்கள். இருப்பினும் இவ்வுதவிகளைச் செய்தோர் தாம் உதவியதை மறந்துவிடவேண்டும்.

'நான் செய்தேன்' என்னும் எண்ணத்தோடு செய்யுஞ் செயல் தன்முனைப்புடையதாய், வினையாய், பிறவிக்கு வித்தாய் அமையும். அது சிவபுண்ணியமாகாது. இவ்வகையில் இவ்வாலயத்துக்குப் பேருதவி புரிந்தும் இங்கு பெயர் குறிப்பிடப்படாதவர்கள் யாராவது இருந்தால் அவர்கள் மனம் வருந்தக்கூடாது. அவர்கள் பாக்கியசாலிகள்.

1975ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட ஏழு உறுப்பினர்களைக் கொண்ட ஆலயபரிபாலன சபையில் மேலுஞ் சிலருக்கு இடமளிக்கவேண்டுமென 1977 - 03 - 13ல் கூடிய கூட்டமொன்றில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கமைவாக, பரிபாலனசபையில் மாற்றஞ் செய்யப்பட்டிருக்கிறது. இதுவும் இவ்வாலயம் வளர்ச்சியடைந்து வருவதற்குரிய காரணங்களில் ஒன்றாகும்.

ஆலயத்தில் தைப்பொங்கல், தைப்பூசம், பங்குனி உத்தரம், சித்திரைப் புத்தாண்டு, சித்திரா பூரணை, நவராத்திரி, விளக்கீடு, பிள்ளையார் கதை, ஏகாதசி, கஜமுகசங்காரம், விநாயகசஷ்டி, திருவெம்பாவை, சதுர்த்தசி முதலிய விழாக்களும் அலங்காரத் திருவிழாவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன. கந்தசஷ்டி காலத்தில் கந்தபுராணத்திலுள்ள சூரபன்மன்வதைப் படலம் படித்துப் பயன் சொல்லப்பட்டு வருகிறது.

ஆனைவிழுந்தான் விநாயகப் பெருமான் அடியார்க்கு அருள்புரியும் வண்ணத்தைப் பலரும் பலவிதமாகக் கதை கதையாகச் சொல்லுகிறார்கள். அவற்றையெல்லாம் எழுதுவதானால் அது ஒரு பாரதமாய் அமைந்து விடும்.

விநாயகப்பெருமான் கோயில்கொண்டெழுந்தருளியிருந்து வேண்டுவார்க்கு வேண்டுவன நல்கித் திருவருள் புரிவதால் இவ்வாலய மூர்த்தியின் சிறப்பையும், ஸப்த கன்னிகைகள் தங்கியிருந்து விநாயகப் பெருமானை வழிபட, இறைவன் திருநாமத்தோடு தொடர்புடையதாய், ஆலயம் அமைந்திருக்கும் இடப்பெயர் அழைக்கப்படுவதனால் தல விசேடத்தையும் உணரலாம்.

மூர்த்தி தல விசேடமுடைய இவ்வாலயத்துக்குத் தீர்த்தமொன்றில்லாதது பெருங்குறையெனக் கருதப்படுகிறது. இக்குறையையும் நீக்கி அருள்புரியும்வண்ணம் ஆனைவிழுந்தான் விநாயகப் பெருமானை வேண்டுதல் செய்வோம்.


1. இடப்பெயர் ஆய்வு. காங்கேசன் கல்விவட்டாரம் — பக்கம் 38.
2. காங்கேசன் கல்விமலர் — பக்கம் 160.
3. மாவிட்டபுரத் திருத்தலவரலாறு — பக்கம் 11.
4. மாருதப்புரவீகவல்லி யாத்திரைப்படலம் — பக்கம் 6.
5. மாவிட்டபுரத் திருத்தலவரலாறு — பக்கம் 23.
6. யாழ்ப்பாணவைபவமாலை — பக்கம் 13 - 14. முதலியார் குலசபாநாதன் பதிப்பு 1953.
7. காங்கேசன் கல்விமலர் — பக்கம் 161.
8. ஆனந்தக் கணபதி — திரு. ஆறுமுகம் கதிரிப்பிள்ளை அவர்களின் ஞாபகார்த்த வெளியீடு.
9. உற்பத்திகாண்டம். திருவிளையாட்டுப்படலம் 19.

* அங்கசுந்தரி — மாருதப்பிரவல்லி.

சிவமயம்

மட்டுவில் ஆ. நடராசா அவர்கள் பாடிய

# விநாயகர் திருப்பதிகம்

1. அந்திவான் புரைதிரு செஞ்சடை தாங்கி
அழகிய முப்புரி நூலொளி விளங்க
இந்துடன் அக்கினி இரவிமுச் சுடரும்
இருள்துரந் தருள்செயும் விழிகளாக் கொண்டு
இந்துவின் இளம்பிறை போன்மருப் போடு
இலகுபொன் னோடை பொலிதிரு நுதலாய்
ஐந்தொழில் நாயகன் நீயென வுணர்த்தும்
ஐங்கர விநாயக நின்னடி சரணம்.

2. அங்குச பாசமுன் கரங்களி லேந்தி
ஆருயி ருறுதுயர் துடைப்பது குறிக்கும்
தொங்குவா ரிருசெவி தாங்கிய தலைவ
தந்தியின் முகங்கொடு வந்தருள் செய்வாய்
பொங்குவெஞ் சினத்தொடு பேரமர் புரிந்த
பொய்ந்நெறி அசுரன தெலியுரு வதன்மேல்
தங்கிநீ யூர்ந்தருள் செய்தமை கண்டோம்
ஐங்கர விநாயக நின்னடி சரணம்.

3. மாங்கனி தான்பெறக் கருதிய வேலோன்
மயில்மிசை ஏறிமூ வுலகினைச் சுற்ற
பாங்கினி லிருந்த பரமனைச் சுற்றிப்
பொற்புறு மாங்கனி தான்தரப் பெற்றநீ
தாங்கு முலகமும் உயிர்களு மெல்லாந்
தங்கிடு முந்தன் வியாபகத் தென்ன
வீங்கு பேழைத் திருவயி றுணர்த்தும்
ஐங்கர விநாயக நின்னடி சரணம்.

4. பிரணவ எழுத்ததை நோக்கிட இறைவி
பிடியுடன் களிறெனப் பிரிந்தது தோன்றி
விரவியே யோரெழுத் தாகிய போது
வந்தருள் மும்மத ஆறுபா யைய
கரவுடை நெஞ்சினர்க் கறிவரும் பொருளே
கருதுவா ருறுதுயர் தீர்த்தருள் செய்வாய்
அரனென நீயென வேறறு பொருளே
ஐங்கர விநாயக நின்னடி சரணம்.

5. கயமுக னுரைத்திட அவன்சபை தன்னிற்
கரங்களை முட்டியாய்ப் பிடித்தவை கொண்டு
வயங்குதஞ் சிரமதில் மும்முறை குட்டி
வலமிட மாறியே கைகளை யெடுத்து
பயத்துட னவைகொடு செவிதனைப் பற்றிப்
பணிந்தெழு வானவர் வேண்டுதல் செய்ய
துயர்கெடுத் தவரதை உன்முன் செயவருள்
ஐங்கர விநாயக நின்னடி சரணம்.

6. உன்கொம் பானுயிர் நீத்த கயமுக
னுடலி னுகுசெங் குருதி நீத்தம்
அன்றோ டியயலி லொருகா டடைந்து
அக்காட் டைச்செங் காடாக் கவங்கு
அன்பினற் சிவபெரு மானுருக் கோலி
அருத்தி யொடருச் சனைபுரிந் தங்கே
அன்றோர் கணப தீச்சரந் தந்த
ஐங்கர விநாயக நின்னடி சரணம்.

7. பொய்மொழிந் துமையாள் தன்சா பத்தாற
ம்பா கித்தவஞ் செய்த மாலோன்
மெய்ஞ்ஞா னக்கொழுந் தேயுன் னருளால்
முன்னுரு வமுற்றுன் னையருச் சித்து
மெய்யன் பாற்றன் போலியா ருமார்கழி
மதிவளர் சட்டியி லருச்சிக் கவவர்
உய்ய வருளுகெ னவவ்வா றருள்செய்
ஐங்கர விநாயக நின்னடி சரணம்.

8\. உமையாள் தன்மைந் தனுய்நீ யுதித்த
உயர்வு பெறுமா வணிவளர் பிறையில்
அமையுநற் சதுர்த்தி யொடுசதுர்த் தியாவும்
அன்றுமால் துதித்து மார்கழி மதியில்
உமைவேண் டியருள் பெற்றசட் டிவெள்ளி
யுன்விர தம்விதி யினுலநுட் டிப்பார்
தமையணு குவிக்கினங் கள்போக் கியருள்
ஐங்கர விநாயக நின்னடி சரணம்.

9\. அப்பமோ டவல்பொரி யெள்ளு ருண்டை
அருத்தி தருமோ தகந்தீங் கரும்பும்
முப்பழ மும்பால் தேன்விளாங் கனியும்
முன்வைத் துத்தூ பதீபங் களேந்தி
அப்போ டுதும்பை கொன்றை யெருக்குட
னறுகு வன்னி பிறவுங் கொண்டு
முப்போ துமர்ச்சிப் பார்வினே தீர்க்கும்
ஐங்கர விநாயக நின்னடி சரணம்.

10\. தென்பொதி கைசெல் வான்கொங் குதங்கு
தமிழ்முனி தன்கமண் டலத்தைக் காகமாய்
வன்சொண் டாற்கவிழ்த் தந்நீ ருகுத்து
வாடும் மலர்ச்சோ லையுய் வடைய
நன்னீர் சுரக்குநற் காவிரி தந்த
நம்பினுர்க் கருள்சுரக் கும்மெய் ஞானக்
குன்றே கணபதி யேயெமக் கருள்செய்
ஐங்கர விநாயக நின்னடி சரணம்.

சுபம்